ஓம்

மதிப்பெண் வழிகாட்டி 2018-19

பன்னிரண்டாம் வகுப்பு **மொத்தமதிப்பெண்கள் 100**

பாடம்-தமிழ் **காலஅளவு - 3 மணிநேரம்**

பகுதி அ **(50மதிப்பெண்கள்)**

SECTION A

அ. கீழ்வருவனவற்றுள் எவையேனும் ஐந்து தொடர்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக. 5x1=5

1. வைக்கோல் மாடுகளுக்கு உணவாகிறது.
2. இந்த வீட்டை நான் குறைந்த விலைக்கு வாங்கினேன்.
3. சீனத்துப் பட்டும் சிங்களத்துத் தேக்கும் சிறந்தது.
4... வாசல் தோறும் போடப்பட்டுள்ள கோலங்கள் அழகாய். உள்ளன.
5.. தொலைக்காட்சிப் பெட்டியின் அருகில் உட்கார்ந்து படம் பார்க்காதே.
6. காற்றில் ஏறிப் பயணம் செய்யும் காலம் ஒன்றுவரும்.
7. உன்னை வெல்ல யாருமில்லை உறுதியோடு போராடு.

ஆ.கீழ்வருவனவற்றுள் எவையேனும் ஐந்து தொடர்களை வல்லினமெய்யிட்டுத் திருத்துக . 5x1=5

1.அவனுக்கு மெல்ல பேசக் கற்றுக் கொடுத்தேன்

2. புதுத் துணியுடுத்தி பூங்கோதை பள்ளிக்குச் சென்றாள்.

3. அந்தப் பாதை எங்குச் செல்கிறது?

4. தாமரைப் பூப்போன்ற மலர்ப்பாதம்.

5 நமக்குத் தொழில் கவிதை. நாட்டிற்கு உழைத்தல். இமைப்பொழுதும் சோராதிருத்தல்.

.6. காவித் துணியும் வேண்டேன் கற்றைச் சடையும் வேண்டேன்.

7.இரண்டு துணைப்பாடக் கட்டுரைகள் எழுதினேன்.

இ.கீழ்வருவனவற்றுள் எவையேனும் ஐந்து தொடர்களைக் கூறியவாறு மாற்றி எழுதுக.5x1=5

1. அழகன் ஆற்றுநீரில் நனைவித்தான்.
2. கல்லணையைக் கரிகாலன் கட்டினான்.
3. தேன்மொழி பொன்னியிடம் அவள்(தான்) மறுநாள் பள்ளிக்குச் செல்லப் போவதிலலை என்று கூறினாள்.
4. கம்பர் இராமாயணத்தை இயற்றினார்.*சேக்கிழார் பெரியபுராணத்தைஇயற்றினார்.*
5. சித்தரஞ்சன் என்ற சிற்பியால் இவ்வழகிய பொற்சிலை செய்யப்பட்டது.
6. மலர்விழி நடனம் கற்றாள்.
7. *கமலக்கண்ணன* அவன் வாழும் ஊரில் அறியாதவர்கள் யாருமில்லை.*(அல்லது)* கமலக்கண்ணன அவன் வாழும் ஊரில் எவரும் அறியார்.

.அ.பின்வரும் பத்தியைப் படித்து அதன்கீழ் காணும் வினாக்களுக்கு விடையளி5x2=10

1. கணினிகள் மடிக்கணினிகள் மின்னிசைக் கருவிகள் மின்கலங்கள் தொலைபேசிகள் மின்னணுப்பலகைகள் உள்ளிட்ட பல்வேறு மின்னணுக் கருவிகளிலிருந்து ஒதுக்கப்படுவன மின்னணுக் கழிவுகள் ஆகும்
2. இறக்குமதி செய்யப்படும் மலிவான மின்னணுப் பொருட்கள் குறைந்தகாலங்களிலேயே மின்னணுக்கழிவுகளாக மாறுகின்றன. சீனாதாய்லாந்திலிருந்து இறக்குமதி செய்கிறோம்.
3. மின்னணுக் கழிவுகளால் புற்று நோய் நரம்புத் தளர்ச்சி கண்பார்வைக் குறைபாடு முதலிய நோய்கள் ஏற்படுகின்றன..
4. மின்னணுக் கழிவுகளில் நச்சுத்தன்மையுள்ள காரீயம் பாதரசம் குரோமியம் இரும்பு செம்பு முதலிய உலோகங்கள் கலந்துள்ளன.
5. சல்பர் கொண்ட மின்னணுக் கழிவால் மனிதர்களின் கல்லீரல் இதயம் கண் தொண்டை நுரையீரல் நரம்பு முதலியவை பாதிக்கப்படுகின்றன.

.

ஆ. நேர்க்காணல் **5**

1. மாணவர்களின் கற்பனைத் திறனுக்கு ஏற்பவினாவிடைகள் அமைந்திருக்கலாம்.

2. வினா,முடிக்கும் வினா ஆகியவற்றின் விடைகள் மரபுப்படி அமைந்திருக்கலாம்.

3. தலைப்புச்சார்ந்தேவினாவிடைகள் அமைதல் வேண்டும்.

4. விடைகள் நேர்மறைஎண்ணங்களுடன்அமைதல் வேண்டும்.

5. தொடக்கம், அன்றி தலைப்புச் சார்ந்த ஐந்து வினா விடைகளாவது அமைதல் வேண்டும்.

6. எளிமையும் புரிதலும் சிறப்பும் அவசியம்.

(அல்லது)

பின்வரும் செய்யுளின் கீழ்க்காணும் வினாக்களுக்குவிடையளி

1. பகட்டுவாழ்க்கை நீராவி போன்றது
2. சீரோடு வாழ்வதற்கு சிக்கனம் துணைபுரியும்
3. நீரூற்றைப் போன்றது சிக்கனம்
4. பேரோடும் புகழோடும் வாழ்வதற்கு பேரறிவு துணைபுரியும்
5. சிக்கனத்தை வேரோடு பெயர்த்தவர்கள் விக்கிவிக்கிஅழுபவர்கள்.

3. கீழ்வரும் தலைப்புகளில் ஒன்று பற்றி கட்டுரைவரைக 1x10=10

பொதுக் கட்டுரை

தலைப்பு,குறிப்புச்சட்டகம்	1
முன்னுரை	1
பக்கத் தலைப்புகள்	7
முடிவுரை	1

மேற்கோள்களுடன் நல்லமொழிநடையில் கட்டுரைஅமைதல் வேண்டும்.

4. பின்வரும் தலைப்புகளில் ஒன்று பற்றிக் கடிதம் வரைக 1x10=10

விண்ணப்பக் கடிதம்

,இடம்,தேதி ½

அனுப்புநர் முகவரி 1

பெறுநர் முகவரி 1

விளித்தல் ½

பொருள் ½

கருத்து,

1. பகுதிவாழ் அறிமுகம்

2. தலைப்புச்சார்ந்தசெய்தி

3. விண்ணப்பம் / வேண்டுகோள் 5 ½

4. நன்றி,இப்படிக்கு,கையொப்பம்,(முடிப்பு) ½

5. உறைமேல் முகவரி ½

(அல்லது)

உறவுமுறைக் கடிதம்

தலைப்பு,இடம்,தேதி 1

அனுப்புநர் முகவரி ,விளித்தல் ½

கருத்து,

1. நலம் கேட்டல் 1

2. தலைப்புச்சார்ந்தசெய்தி 6

4. இப்படிக்கு, உன் அன்புள்ள,கையொப்பம்,(முடிப்பு) ½

5. உறைமேல் முகவரி 1

பகுதி ஆ (50 மதிப்பெண்கள்)

SECTION B

5. கீழ்வரும் வினாக்களில் எவையேனும் இரண்டனுக்கு விடையளி 2x10=20

உரைநடை வினாக்களுக்குரிய விடைகளின் கருத்துகள் அனைத்தும் தெளிவாகவும் நல்லமொழிநடையிலும் சிறப்பாக இடம் பெற்றிருத்தல் வேண்டும்.

6. கீழ்வரும் செய்யுளின் அடியிற்காணும்வினாக்களுக்கு விடையளி 5

1. நூல் அகநானூறு ஆசிரியர் மதுரைமள்ளனார்.

2. தலைவன் தேர்ப்பாகனிடம் கூறுவதாகஅமைந்துள்ளது

3. பூட்டி- கட்டி (அல்லது) இணைத்து

அல்லது

1. நூல் பாண்டியன் பரிசு ஆசிரியர் பாவேந்தர் பாரதிதாசன்
2. அன்னம் வேலனிடம் கூறியது.
3. பேழை-பெட்டி

.7.கீழ்வரும் வினாக்களில் எவையேனும் இரண்டனுக்கு விடையளி 2x5 = 10

செய்யுள் வினாக்களுக்குரிய விடைகளின் கருத்துகள் அனைத்தும் தெளிவாகவும் நல்லமொழிநடையிலும் சிறப்பாக இடம் பெற்றிருதத்தல் வேண்டும்.

8.துணைப்பாடக் கட்டுரை 10

தலைப்பு,குறிப்புச்சட்டகம்,முன்னுரை,பக்கத் தலைப்புகளுடன் மையக் கருத்துகள் சிதையாமல் இயல்பானமொழிநடை,முடிவுரையுடன் அமைதல் வேண்டும். இவ்வாண்டு வினாத்தாளில் பால்வண்ணப்பிள்ளையின் பாத்திரப்படைப்பிற்குப் பதிலாக முழு கதை எழுதியிருப்பினும் மதிப்பெண் வழங்கலாம்.

9.பண்புநலன் 5

குறிப்பிட்டபாத்திரப் படைப்பின் குறைந்தது ஐந்து பண்புகளை வெளிப்படுத்தும் விதமாகக் கருத்துகள் இடம் பெறல் வேண்டும் வேலி பாடத்தில் ஏதேனும் இரு மாந்தர்களின் பண்புநலன்களை விளக்கினால் போதுமானது.

மதிப்பிடும் முறைகள் 2018-19

வினாஎண்கள்

1. அ. ஆ, இ (இலக்கணம்) - 15 முழு மதிப்பெண்கள் வழங்கலாம்

அ ஆ வினா விடைகளில் ஒரு பிழை திருத்தியிருப்பினும் ஒரு மதிப்பெண் வழங்கலாம்

2.. அ. ஆ (பொதுப் பத்தி,நேர்க்காணல்,செய்யுள் பாடல்வினா) -15 முழுமதிப்பெண்கள் வழங்கலாம்

3. பொதுக்கட்டுரை - 10 மதிப்பெண்கள் வழங்கலாம்

4. கடிதம் - 10 முழு மதிப்பெண்கள் வழங்கலாம்

5. உரைநடைவிடைகளில் கருத்துகள் நல்லமொழிநடையிலும் தெளிவாகவும் அமைதல் வேண்டும். சரியானதொடர்கள்சொந்தநடையிலும் அமைந்திருக்கலாம்

20 முழு மதிப்பெண்கள் வழங்கலாம்

6. செய்யுள் வரிவினா - 5 முழு மதிப்பெண்கள் வழங்கலாம்.

7.செய்யுள்விடைகளில் கருத்துகள் நல்லமொழிநடையிலும் தெளிவாகவும் அமைதல் வேண்டும். சரியானதொடர்கள்சொந்தநடையிலும் அமைந்திருக்கலாம்

- 10 முழுமதிப்பெண்கள் வழங்கலாம்

8. துணைப்பாடக்கட்டுரை 10 மதிப்பெண்கள் வழங்கலாம்.

9.பண்புநலன் -5 முழுமதிப்பெண்கள் வழங்கலாம்

மொத்த மதிப்பெண்கள் 100 வழங்கலாம்.

.

****